கார்ப்பரேட் மாஃபியா ஆட்சியில் கிரிமினல்கள் ஆட்டம்!

அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில், பெரியார் நகரில் வசித்து வந்தவர் விவசாயி யுவராஜ். அதே பகுதியைச் சேர்ந்த ஓர் இளைஞர், தன்னுடைய மகளைத் தொடர்ந்து தொந்தரவு செய்து வருவதாகத் திருத்தணி காவல் நிலையத்தில் புகார் தெரிவித்திருந்தார். இளம் வயதான தன் மகளைத் தொந்தரவு செய்யும் இளைஞர் மீது போலீசார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று யுவராஜ் எதிர்பார்த்திருந்தார். ஆனால், நடந்தது வேறு.

அக்டோபர் 4 ஞாயிற்றுக்கிழமையன்று விவசாயி யுவராஜை இரண்டு இளைஞர்கள் சேர்ந்து வெட்டிக் கொலை செய்தார்கள். புகார் கொடுத்தவரின் உயிரைக் காப்பாற்ற முடியாத திருத்தணி போலீசார், கொலை செய்த இரண்டு பேரில் சஞ்சய் லாரன்ஸ் என்பவரைக் கைது செய்த நிலையில், இன்னொரு குற்றவாளியைத் தேடி வருவதாகத் தெரிவித்தார்கள். த.வெ.க. ஆட்சி அமைந்த பிறகு, காவல்நிலையத்தில் புகார் கொடுப்பவர்கள் கொலை செய்யப்படுவது இது முதல்முறையல்ல.

கோவையில் ஒரு தனியார் கல்லூரியில் படித்து வந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவன் அமுதன், கல்லூரி வளாகத்தில் போதைப் பொருட்கள் புழக்கம் அதிகமாக இருப்பது குறித்து புகார் தெரிவித்திருந்த நிலையில், மாணவன் அமுதனுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லாத சூழலில் 6 பேர் கொண்ட கும்பல், மாணவன் அமுதனை அடித்துக் கொன்றது. அவர்களும் அதே கல்லூரியில் படிப்பவர்கள்தான்.

திருவொற்றியூரில் காவல் ஆய்வாளர் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக, கடந்த செப்டம்பர் 8ஆம் தேதி காவல்நிலைய வாசலிலேயே பேட்டி கொடுத்த பிரதீப்ராஜ் என்பவர் மறுநாளே படுகொலை செய்யப்பட்டுக் கிடந்தார். இந்த மரணத்தில் உள்ள மர்மங்களை மூடி மறைக்கும் வேலைகளைத்தான் த.வெ.க அரசு மேற்கொண்டது.

தாராபுரம் இடைத்தேர்தலில் பரப்புரை செய்த கழகத் தலைவர்திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "த.வெ.க. என்பது ஓர் அரசியல் கட்சியே இல்லை. அது ஒரு கார்ப்பரேட் மாஃபியா" என்பதை அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார். குற்றவாளிகள் பலரும் நமக்கான ஆட்சி நடக்கிறது என்ற மனநிலையுடன் வெளிப்படையாகவே குற்றங்களை செய்யத் தொடங்கி விட்டார்கள் என்றும் கழகத் தலைவர் அவர்கள் தனது பரப்புரையில் குறிப்பிட்டார்.

பாலியல் குற்றங்களில் த.வெ.க. நிர்வாகிகள் நேரடியாக சம்பந்தப்பட்டிருப்பதாக, அவர்களால் பாதிக்கப்பட்ட த.வெ.க. பெண்களே புகார் தெரிவிக்கும் நிலையில் தமிழ்நாட்டின் ஆட்சி நிர்வாகம் இருக்கிறது. பெண்கள் மீது தாக்குதல் நடத்துவதாக த.வெ.க.வைச் சேர்ந்தவர்களே த.வெ.க நிர்வாகிகள் மீது புகார் தெரிவிக்கிறார்கள். இவை குறித்து எந்த நடவடிக்கையும் இல்லை. அதனால் த.வெ.க. வினரும் அவர்களுடன் நீண்டகாலமாகத் தொடர்பில் உள்ள கிரிமினல்களும் அடாவடிச் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

முதலமைச்சர் விஜய்யின் சொந்தத் தொகுதியான பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட மகாகவி பாரதியார் நகரில் ஒரு செல்போன் கடையில் பட்டாக்கத்தியைக் காட்டி மிரட்டி, மாமூல் வசூலித்த விவகாரம் சி.சி.டி.வி.யில் பதிவான காட்சிகள் மூலமாக அம்பலமானது. இந்த விவகாரத்தில் த.வெ.க.வைச் சேர்ந்த வட்டச் செயலாளர் சம்பந்தப்பட்டிருப்பது குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகி, அது விவாதப் பொருளாகியுள்ளது.

சட்டவிதிகளால் தங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்கிற திமிர்த்தனம் த.வெ.க.வின் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் நிர்வாகிகளிடம் வெளிப்படுகிறது. அமைச்சர் ஒருவரே டூவீலரை வீலிங் செய்யும் சாகச ரீல்ஸ் வீடியோக்களைப் பெருமையுடன் பதிவிட்டிருந்தார். பெண் எம்.எல்.ஏ. ஒருவர் இடைத்தேர்தல் பரப்புரையில், ஹெல்மெட் அணியாமல் பைக் ஓட்டிச் செல்வதை ரீல்ஸ் எடுத்து வெளியிட்டிருந்தார். சட்ட விதிகளையும் சாலை விதிகளையும் மதிக்க வேண்டிய அமைச்சர்களும் எம்.எல்.ஏ.க்களும் அதை மீறி செயல்படுவதால், விஜய் நடித்த படங்களின் போக்கிரித்தனமானக் காட்சிகளை ஹீரோயிசம் என நினைக்கும் விடலைகள் சென்னையின் முக்கியமான சாலைகளில் 'வீலிங் சாகசம்' செய்து பொதுமக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்துவதுடன், தங்கள் உயிருக்கும் தாங்களே ஆபத்தை விளைவித்துக் கொள்கின்றனர்.

சினிமாவைப் போலவே விஜய், ஆட்சிப் பொறுப்பேற்கும் சீனுக்கு அடுத்தடுத்த சீன்களில் தமிழ்நாட்டையே தலைகீழாக மாற்றிவிடுவார் என்று ரூட் மாஃபியா வெளியிட்ட ரீல்ஸ்களை நம்பி விசிலுக்கு வாக்க ளித்த மக்கள் பலரும்



கோவி.லெனின்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

இன்று கார்ப்பரேட் மாஃபியாவிடம் சிக்கிக் கொண்டு விட்டோமே என்ற ஏமாற்றத்தை உணர்ந்து வேதனைப்படுகின்றனர். அவர்களில் உழைக்கும் மக்களின் நிலை மிகவும் பரிதாபமாக உள்ளது.

விஜய்யை வெற்றிபெற வைத்த பெரம்பூர் தொகுதியின் வியாசர்பாடி பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் முஹமது இப்ராகிம் என்பவர் ஆட்டோ ஓட்டுநர்களுக்கான நல வாரியத்தில் நடக்கும் முறைகேடு களைக் குறிப்பிட்டு, ஆட்டோ ஓட்டுநர்களுக்கு எந்த சலுகையையும் த.வெ.க. ஆட்சியில் வழங்கவில்லை எனக் குற்றம்சாட்டி வீடியோ வெளியிட்ட பிறகு, தற்கொலை செய்து உயிரை மாய்த்திருக்கிறார். அக்டோபர் 4 அன்று நடந்த இந்த பரிதாப உயிரிழப்பு, ஆட்டோ ஓட்டுநர்கள் உள்ளிட்ட உழைக்கும் தொழிலாளர்களிடம் பெரும் அதிர்வை ஏற்படுத்தியுள்ளது. "இன்னும் எத்தனை உழைப்பாளிகளின் உயிரை இந்த அரசு பறிக்கப்போகிறதோ" என்று அச்சமும் வேதனையும் கலந்த குரல் தொழிலாளர்களிடமிருந்து வெளிப் படுகிறது.

பிற கட்சி எம்.எல்.ஏ.க்களை குதிரை பேரம் மூலம் விலைக்கு வாங்கி, தேவையில்லாத இடைத்தேர்தலை வலிந்து திணித்திருக்கும் த.வெ.க.வின் கார்ப்பரேட் மாஃபியா ஆட்சியில், கிரிமினல்கள் தாறுமாறாக ஆட்டம் போட்டு வருகிறார்கள். விவசாயிகள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் அன்றாட வாழ்வுக்காகத் தெருவில் வந்து போராடும் நிலையும், தற்கொலை செய்து கொள்ளும் அவலமும் உருவாகியிருக்கிறது.

கார்ப்பரேட் மாஃபியாக்கள் தங்கள் சொந்த நலனை மட்டுமே நோக்கமாக வைத்து செயல்படுவார்கள். அவர்களுக்கு மக்கள் எல்லாருமே வணிகப் பண்டம்தான். த.வெ.க. அரசும் அப்படித்தான் செயல்படுகிறது. கார்ப்பரேட் மாஃபியாவுக்கு இன்வெஸ்டிங் பார்ட்னர், வொர்க்கிங் பார்ட்னர், ஸ்லீப்பிங் பார்ட்னர், சீக்ரெட் பார்ட்னர் என்று கழகத் தலைவர் திராவிட நாயகர் தனது பரப்புரையில் குறிப்பிட்டார்.

த.வெ.க. எனும் கார்ப்பரேட் மாஃபியாவுக்கு இன்வெஸ்ட் பார்ட்னர் 'முதல்' போட்ட அமைச்சர் வகையறாக்கள், வொர்க்கிங் பார்ட்னர் அமைச்சர் பதவிக்காக பல்லக்குத் தூக்குகிறோம் எனப் பெருமைப்படும் கூட்டணிக் கட்சிகள், ஸ்லீப்பிங் பார்ட்னர் எதையும் கண்டுகொள்ளாத தேர்தல் ஆணையம் உள்ளிட்ட அதிகார அமைப்புகள். சீக்ரெட் பார்ட்னர் ஆட்டி வைக்கும் ஆர்.எஸ்.எஸ். தலைமை.

பொதுமக்களின் நலனையும், தமிழ் நாட்டின் வளர்ச்சியையும் புறக்கணித்து வரும் த.வெ.க. ஆட்சியில், அதிக வேலைவாய்ப்புகளைத் தரக்கூடிய பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகள் பலவும் ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. அதே நேரத்தில், தூத்துக்குடியில் மக்களின் எதிர்ப்புக்குள்ளான ஸ்டெர்லைட் ஆலை நிறுவனம், தாங்கள் மீண்டும் முதலீடு செய்யவிருப்பதாக அறிவித்துள்ளது.

அ.தி.மு.க. ஆட்சியில் தூத்துக்குடியில் வேதாந்தா நிறுவனத்தின் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக மக்கள் நடத்திய போராட்டத்தில், காவல்துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேரின் உயிர் அநியாயமாகப் பறிக்கப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்குரிய நிவாரணம்அரசு வேலை ஆகியவை வழங்கப்பட்டதுடன், ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறப்பதற்காக வேதாந்தா நிறுவனத்தார் எடுத்த எந்த முயற்சிக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை. த.வெ.க. ஆட்சியில் 2.3 பில்லியன் டாலர் முதலீடு செய்து ஆலையைத் திறக்கும் முயற்சி களைத் தொடங்கியுள்ளது வேதாந்தா நிறுவனம். துப்பாக்கிச் சூட்டில் பலியான ஸ்நோலினைத் தனது தங்கை என அன்று குறிப்பிட்ட நடிகர் விஜய், இப்போது முதல்வரான பின், வேதாந்தா நிறுவனத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருக்கிறார்.

செவிலியர்கள் மீது இரவில் தாக்குதல் நடத்துகிறது விஜய்யின் சிங்கப் பெண் படை. மீனவர்களை அலட்சியப்படுத்தி அவர்களின் வாழ்விடத்தைப் பறிக்கிறது விஜய் ஆட்சியின் நிர்வாகம், விவசாயிகளைக் கைது செய்கிறது த.வெ.க. அரசின் காவல்துறை, தேடப்படும் குற்றவாளி ஒருவர் முதல்வர் விஜய்யின் பரப்புரையில் மாட்டு வண்டி ஓட்டுகிறார். கார்ப்பரேட் மாஃபியாவான த.வெ.க. ஆட்சியில் கிரிமினல்கள் கொழுத்துத் திரிகிறார்கள். நம்பி வாக்களித்த மக்கள் ஒவ்வொரு நாளும் உயிர் வாழ்வதற்கே தவிக்கிறார்கள்.

த.வெ.க. ஆட்சியில் சட்டம் - ஒழுங்கு சீர்கேடு!

மதுரை சோழவந்தானில் அடுத்தடுத்து கொலை!

மக்கள் அச்சம்!

மதுரை, அக்.8- மதுரை சோழவந்தானில் அடுத்தடுத்து நடைபெறும் தொடர் படுகொலைகள் சம்பவங்களால் பொதுமக்கள் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மாநிலத்தில் அரசு என்ற ஒரு செயல்படுகிறதா என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மதுரை மாவட்டம் சோழவந்தான் பகுதியைச் சேர்ந்தவர் சியாம் சுந்தர் ராஜன் என்பவர், சாலையில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, டாஸ்மாக் மதுக்கடை அருகே அவரை மர்ம நபர்கள் வழிமறித்து, பயங்கர ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்துவிட்டு தப்பியோடினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. தகவல் அறிந்து வந்த சோழவந்தான் காவல்துறையினர், சுந்தரின் உடலைக் கைப்பற்றி உடற் கூறு ஆய்வுக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கொலைக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர். த.வெ.க. ஆட்சியில் நாள் தோறும் சர்வ சாதாரணமாக கொலை சம்பவங்கள் நடைபெறுவதால் பொதுமக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். த.வெ.க. ஆட்சியில் உயிரை கையில் பிடித்து கொண்டு வாழ்ந்து வருவதாக வேதனை தெரிவித்துள்ளனர். சோழவந்தான் பகுதியில் கஞ்சா மற்றும் கள்ளச் சந்தையில் மது விற்பனை சர்வ சாதாரணமாக நடைபெறுவதாகவும், இதனால் பலர் போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி குற்றச் சம்பவங்களில் ஈடுபடுவதாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சோழவந்தான் அருகே தென்கரை பகுதியில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு முன் விரோதம் காரணமாக பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். அதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் செக்கானூரணி அருகே தேங்கள்பட்டி பகுதியில் இளைஞர் டிரைவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரை சோழவந்தானில் டாஸ்மாக் அருகே ஓட்டுனர் படுகொலை

பயங்கர ஆயுதங்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட ஓட்டுனர் த.வெ.க. ஆட்சியில் கொலை நகராகும் மதுரை தொடர் கொலைகளால் மக்கள் அச்சம்

மதுரை மாவட்டம் சோழவந்தானில் 36 வயதான சியாம் சுந்தர் ராஜன் என்பவர் படுகொலை இருசக்கர வாகனத்தில் சென்ற சுந்தர் ராஜனை டாஸ்மாக் கடை அருகே வழிமறித்த மர்ம கும்பல், பயங்கர ஆயுதங்களால் வெட்டி கொலை செய்தது மதுரை சோழவந்தான் அருகே தென்கரை பகுதியில் அண்மையில் பட்டப் பகலில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். நேற்று முன்தினம் மதுரை செக்கானூரணி அருகே தேங்கள்பட்டி பகுதியில் இளைஞர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

மதுரையில் அடுத்தடுத்து அரங்கேறும் கொலைச் சம்பவங்களால் மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

காரைக்குடியில் ஆட்டோ ஓட்டுநருக்கு அரிவாள் வெட்டு!

காரைக்குடி, அக். 8 - சிவகங்கை மாவட்டம் காரைக்குடி செஞ்சை பகுதியில் ஆட்டோ ஓட்டுநர் பிரதாப்பை, இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் அரிவாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காரைக்குடி M.M வீதியில் உள்ள RMR துணிக் கடை வாசல் பகுதியில் பிரதாப் ஆட்டோ ஓட்டி வந்துள்ளார்.

அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள், பிரதாப் ஓட்டி வந்த ஆட்டோவை வழிமறித்து, அவரை அரிவாளால் வெட்டியதாக கூறப்படுகிறது.

இதில் காயமடைந்த பிரதாப்பை காரைக்குடி தெற்கு காவல்துறையினர் மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீஸார், தாக்குதல் நடத்திய மர்ம நபர்கள் யார், எதற்காக தாக்குதல் நடத்தப்பட்டது, பிரதாப்புக்கும் அவர்களுக்கும் இடையே முன்விரோதம் ஏதேனும் உள்ளதா என்பது உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் RMR துணிக் கடை வாசல் பகுதியில் ஆட்டோ ஓட்டுநர் அரிவாளால் வெட்டப்பட்ட சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாராபுரம் இடைத்தேர்தலில் முறைகேடாக வாக்குப்பதிவு செய்ய வற்புறுத்தல்!

ஜனநாயக உரிமையை நிலைநாட்டிய அம்மையாருக்கு நன்றி!

தி.மு.க. ஐ.டி.விங் நிர்வாகிகள் நேரில் சந்தித்து தெரிவித்தனர்!



தாராபுரம்,அக்.8- டமும் தெரிவித்து அவர்களுக்கும் எங்களது நன்றியையும் வாழ்த்தையும் பகிர்ந்துகொண்டோம்.

அம்மையார் அவர்களை நேரில் சந்தித்து பாராட்டுகளை பகிர்ந்த தி.மு.க. தகவல்தொழில்நுட்ப அணி துணை செயலாளர் பி.கேசவன், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் அன்பழகன், தாராபுரம் நகர ஒருங்கிணைப்பாளர் பிரபு, தாராபுரம் மேற்கு ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன், 10வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் யூசுப், வார்டு செயலாளர் மயில்சாமி, வார்டு பிரதிநிதிகள் ராஜா, சிராஜ் பானு ,மாணவர் அணி முஸ்தபா, ஓட்டுனர் அணி சிந்தனை செல்வன், BLA2 சித்திக் மற்றும் அணியின் உடன்பிறப்புகள் அனைவருக்கும் நன்றி.

இவ்வாறு தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

தஞ்சை மத்திய மாவட்ட பொறியாளர் அணி

அமைப்பாளர் பொறி.அ.ராமசேகர் மறைவு!

மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. அஞ்சலி!

தஞ்சாவூர், அக். 8 - தஞ்சை மத்திய மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் பொறி.அ.ராமசேகர் நேற்று 07.10.2026 புதன் கிழமை அதிகாலை 05.00 மணியளவில் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

திருவையாறு வட்டம், கீழப்புனல்வாசல் பகுதியை சேர்ந்த பொறி.அ.ராமசேகர் சிறுவயது முதல் கழகத்தின்பால் பற்று கொண்டவராக இருந்தார். கழகம் அறிவித்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொதுக்கூட்டங்களில் தவறாது பங்கு கொண்டவர். கழக முன்னணி தலைவர்களால் எஞ்சினியர் என்று பாசமாக அழைக்கப்பட்டார்.

பொறி.அ.ராமசேகர் மறைவுச் செய்தி அறிந்த தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கீழப்புனல்வாசலில் உள்ள ராம்சேகர் இல்லத்திற்கு கழக நிர்வாகிகளோடு நேரில் சென்று



அஞ்சலி செலுத்தினார்.

அன்னாரது இறுதி ஊர்வலம் நேற்று 07.10.2026 புதன்கிழமை மாலை 05.00 மணியளவில் அவரது சொந்த ஊரான கீழப்புனல்வாசலில் நடைபெற்றது.